(இடைவேளைக்குப் பின் மாலை 4-00 மணி)

பேரவை மாலை 4-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் கூடியது.

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு—கேட்டுப் பெறுதல் (தாற்காலிக அதிகாரங்கள்) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 3/1969).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1969-ம் ஆண்டு, இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு--கேட்டுப் பெறுதல் (தாற்காலிக அதிகாரங்கள்) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 3/1969) சட்டப் பேரவை நிறைவேற்றியபடி, சட்டமன்ற மேலவையில் திருத்தம் எதுமின்றி 25-2-1969-ம் நாளன்று நிறைவேற்றப்பட்டதென்று சட்டமன்ற மேல்வைத் தலைவரிடமிருந்து தகவல் வந்துள்ளதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 6/1969).

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா* (சட்டப் பேரவை மசோதா எண் 6/1969) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கல் மசோதாவை நிறைவேற்றுவதற்கு முன் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக நிதி ஒதுக்கல் மசோதா எந்தவிதமான விவாதமும் இல்லாமல் நிறைவேறுவது தான் வழக்கம். ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பல இடங்களில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் பட்டுவாடா ஆகாமல் இருக்கின்றது. குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் ஆசிரியர்-ஆசிரியைகளிடத்திலிருந்து நாள்தோறும் சம்பளம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்று குறைகள் வந்தவண்ணம் இருக்கின்றன. 'நாங்கள் கொடுக்க வேண்டிய மானியத்தையெல்லாம் கொடுத்தாகிவிட்டது. ஆசிரியர்களுக்கு பஞ்சாயத்து ஒன்றியத்திலிருந்துதான் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். நாங்கள் எல்லா மானியங்களையும் கொடுத்துவிட்டோம்' என்று அமைச்சரவை தரப்பிலிருந்து

* 26-2-1969-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.